*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII (1)**
**December - 2022**

# "மரணம் மட்டுமா மரணம்" - எழுப்பும் கலக்குரல்கள்

[1]அருள்பாண்டி க மற்றும் கணேஷ்வரி ப[2]
[1]முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு, [2]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author:arul91733@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தற்காலப் படைப்பிலக்கியங்களில் திருநங்கைகள் குறித்த இலக்கியங்கள் பரவலாக வெளிவந்துள்ளன. சு. சமுத்திரம் உள்ளிட்ட பல படைப்பாளர்கள் திருநங்கைகளின் வாழ்வியலை, உணர்வுகளை எழுத்தாளர் என்ற கோணத்திலிருந்து எழுதியிருக்கின்றனர். திருநங்கைகளே தம்மைப் பற்றி எழுதுவதில் ஒரு உண்மைத் தன்மையும், உணர்வுப் புரிதலும் சுதந்திரமாக வெளிப்படும். அந்த வகையில் லிவிங் ஸ்மைல் வித்யா என்கின்ற திருநங்கை தன் வாழ்வில் நடந்த அவலங்களை, அவர் சந்தித்த அவமானங்களை, வலிகளை, உணர்வுகளை "மரணம் மட்டுமா மரணம்" என்கிற கவிதைத் தொகுப்பின் வழி குரல் எழுப்புகிறார். சமூகத்தில் அவர்கள் இழிவாக நடத்தப்படுவதையும், குறியீட்டுப் பெயர்களால் அழைக்கப்படுவதையும் தனது கவிதைகள் வழி அம்பலப்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிடும் அஃறிணைச் சுட்டுப்பெயராகிய 'அது' என்ற பெயரால் அழைக்கப்படுவதையும் ஒட்டுமொத்தத் திருநங்கைகள் சமூகத்தின் ஒற்றைக் குரலாக ஒலிக்கும் மரணத்தைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**குறிப்புச் சொற்கள் : திருநங்கைகள், அலி, அஃறிணைகள், சுதந்திரப் பிரகடனம், வன்முறை, சமூகம்.**

## முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறுபட்ட பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கெனத் தனித்துவமான வாழ்க்கை முறையையும் கலாசாரத்தையும் கொண்டிருந்தனர். இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலைப் பிம்பங்களாகப் பிரதிபலிக்கின்றன. சங்க இலக்கியம் தொட்டு தற்கால இலக்கியங்கள் வரை மக்கள் பிரச்சனைகளைப் பற்றி சுட்டிக்காட்டாத இலக்கியங்களே இல்லை எனலாம். மக்களின் குரல்களாக அவை ஒலிக்கின்றன. இன்ப துன்பங்களைப் பற்றி பேசும் இலக்கியங்கள் பலவற்றுள் சில மொழியைக் கூர்மையான ஆயுதமாக்கித் தன்னுணர்வை எவ்வித ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகின்றன. அந்த விதத்தில்

கருப்புப் பிரதிகள் வழி டிசம்பர் 2017 இல் வெளியான ''மரணம் மட்டுமா மரணம்'' என்கிற லிவிங் ஸ்மைல் வித்யாவின் கவிதைத் தொகுப்பில் எதார்த்தமான கலகக் குரல்கள் வெளிப்படுத்துவதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## லிவிங் ஸ்மைல் வித்யா

1982 –ஆம் ஆண்டு திருச்சியில் தன் பெற்றோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். சரவணன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல போராட்டங்களுக்கு இடையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைகழகத்தில் மொழியியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். தன்னை ஒரு திருநங்கையாக (மூன்றாம் பாலினமாக) உணர்ந்த இவர் பால் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டு ''வித்யா'' என்ற பெயரில் வாழத் தொடங்கினார். பின் புனேயிலிருந்து தமிழகத்திற்கு வந்து ஒரு கிராம வங்கியில் பணிபுரிந்தார். சரவணன் என்ற தனது இயற்பெயரை லிவிங் ஸ்மைல் வித்யா என்று சட்டப்படி பெயர் மாற்றம் செய்து கொண்டார். கலை இலக்கியத்தின் மீது நாட்டம் கொண்ட இவர் ''நான் வித்யா'' என்ற வாழ்க்கை அனுபவ நூலை எழுதியுள்ளார். ''கருவறைப் பூக்கள்'' என்கிற திரைப்படத்தில் நடித்துள்ளார். இவரது நடிப்புத் திறமையைப் பாராட்டி ''பிரிட்டி'' கவுன்சிலர் விருதும், சார்லஸ் வாலஸ் இந்திய அறக்கட்டளையின் உதவித்தொகையும் கிடைத்துள்ளன. இவர் இயற்றிய ''மரணம் மட்டுமா மரணம்'' என்கிற நூல் திருநங்கைகளின் வாழ்வியல் போராட்டம் குறித்தான உணர்வுகளை கவிதையாக்கித் தருகிறது.

## இலக்கியத்தில் திருநங்கைகள்

ஆண் பெண் என்கிற பால்பகுப்பில் இரண்டுமல்லாத ஒரு உயிரினமாக திருநங்கைகள் பார்க்கப்படுகின்றனர். இதனை, தொல்காப்பியர்,

**''பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே**
**உயர்திணை மருங்கின் பால்**
**பிரிந்திசைக்கும்''[1]**

என்ற நூற்பாவில் ''பேடி'' என்று மூன்றாம் பாலினத்தைக் குறிப்பிடுகின்றார். ஆணாகப் பிறந்து பெண்மை தன்மை மிகுந்திருந்தால் பெண்பால், என்றும் பெண்ணாகப் பிறந்து ஆண்தன்மை மிகுந்திருந்தால் ஆண்பால் என்றும் விகுதியினை முடிக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். இதனை,

**''ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை அறிகொற்கு ஆகிடன் னின்றே''[2]**

என்ற நூற்பா வழி அறியமுடிகின்றது. இதனைத் தொடர்ந்து நன்னூல், சங்க இலக்கியம், மகாபாரதம், திருக்குறள், நாலடியார், தேவாரம் உள்ளிட்ட பல இலக்கியங்களிலும் திருநங்கைகள் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது.

வள்ளுவர்,

**''பகைபத்து பேடிகை செவ்வான் அவையத்து**
**அஞ்சும் அவன்கல்லா நூல்''[3]**

என்ற குறளில் திருநங்கையைப் 'பேடி' என்று குறிப்பிடுகிறார்.

**''குழவியும் ஆணாய் வலத்து வாகில்**
**குழவியும் இரண்டாம் அபாகக் எதிர்க்கில்**
**குழவி அலியாகும் கொண்டக்கால் ஒக்கியே''[4]**

என்ற திருமந்திர வரிகளில் இடம்பெறும் ''அலி'' என்ற சொல் திருநங்கையைக்

குறிக்கிறது. இப்படிக் காலம் காலமாகத் திருநங்கைகள் குறித்த சொல்லாடல்களை இலக்கியங்களில் காணமுடிகிறது. நவீன இலக்கியங்களில் திருநங்கைகள் இடம்பெறுகின்றனர். மற்றவர்கள் திருநங்கைகளைப் பற்றிப் படைப்பதற்கும் திருநங்கைகளே அவர்களைப் பற்றி எழுதுவதற்கும் ஏராளமான வேறுபாடுகள் இருக்கும். ''மரணம் மட்டுமா மரணம்'' என்ற கவிதை நூல் ஒரு திருநங்கையாலே எழுதப்பட்டது. இதில் அவர்களது உணர்வுகள் மெய்மையாக்கப்பட்டதை இன்னும் ஆழமாக உணரமுடிகின்றது.

## அர்த்தமற்ற பொழுதுகள்

திருநங்கைகள் பாலியல் தொழிலுக்கும், பிச்சை கேட்பதற்கும், ஆபாசமாகப் பேசுவதற்கும் உரியவர்கள் என்ற கருத்து சமூகத்தில் நிலவுகிறது.

**''நாளை நாம் பட்டாம் பூச்சிகளை**
**பார்க்கச் செல்வோம்**
**அவை உருவாவதை**
**பிறப்பதை**
**வளர்வதை**
**பயன்படுவதை –பயன்படாததை**
**பிறகு**
**அதை குறித்து பேசிக் கொண்டிருப்போம்**
**உறங்கவும் செல்வோம்''**

**(மர.ம.ம. பக். 20)**

என்ற கவிதையில் வித்யா தன்னை ஒரு பட்டாம்பூச்சியாகப் பாவித்துக் கொண்டு சமூகச் சிக்கல்களிலிருந்தும் தீண்டாமையைத் தன்னை விடுவித்துக்கொள்கிறார். ''உறங்கவும் செல்வோம்'' என்ற வரிகளில் உலகத் தத்துவத்தை உணர்த்திவிடுகிறார்.

**''உரிய பருவத்திலும்**
**மறுக்கப்பட்ட தேவைகளால்**
**ஏங்கிப் போகிறேன்**
**மகவுகளின் வயிராற**
**வேடிக்கை காட்டப்பட்ட**
**அம்புலிகளைப் போல''**

**(மர.ம.ம. பக். 20)**

என்ற கவிதை வரிகள் ஒட்டுமொத்த திருநங்கைகளின் உணர்வினை உச்சகட்ட, ஏக்கத்தை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

## அஃறிணைகள்

சமூகத்தால் திருநங்கைகள் பல பெயரிட்டு அழைக்கப்பட்டாலும் அவர்களை ஒரு அஃறிணைப் பொருட்களாய்ப் பார்க்கும் இழிவான போக்கு காணப்படுகிறது. அவர்களின் குரல் பொருளற்றதாய் இருக்கிறது. அவர்களின் உணர்வுகள் மதிப்பிழந்தவையாக இருக்கின்றன. ஒட்டுமொத்த திருநங்கைகளுக்கும் வித்யா தனது கவிதை வழி குரல் கொடுக்கிறார்.

**''அது இது என்ற**
**சுட்டுப் பெயர்களால் அறியப்படுபவை**
**அவற்றின் குரல்கள்**
**மனித சப்தங்களுக்கு பொருளற்றவை**
**சிலதோ செய்திகளில் அடிபடக்கூடும் நல்லது**
**நகைப்பிற்குரியது**
**அவற்றின் காதற் பண்புகள்**
**காயடிக்கத்தக்கவை**
**அஃறிணைகளின் பொருள்**
**அவை மனிதர்கள் இல்லை என்பது மட்டுமே**
**கையிருந்தால் என்ன?**
**காலிருந்தால் என்ன?**
**மேலும்**
**ஆறு அறிவு இருந்தால் தான் என்ன?''**

**(மர.ம.ம. பக்.26)**

ஆறறிவு பெற்ற ஆண் பெண் இனமே நீ ஆறறிவு பெற்றிருப்பதால் என்ன பயன்? உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத் தெரியாத மனிதர்கள் ஆறறிவு பெற்றிருந்தும் எந்தப் பயனும் இல்லை என்பதை அழுத்தமாகக் கூறுவதன் வாயிலாகத்

திருநங்கைகளுக்காகத் தன் கருத்தைப் பதிவுசெய்கிறார் வித்யா.

### வன்முறை

ஒரு முறை அல்ல சமூகத்தால் பல முறை ஏமாற்றுதலுக்கும் அவமானங்களுக்கும் வலிகளுக்கும் உள்ளான வன்முறைக் கொடூரங்களை இரத்தச் சொற்களால் வடித்துத் தருகிறார் கவிஞர்,

**"ஒருமுறை கீறுகிறாய்……**
**இரண்டாவதாகக் கீறுகிறாய்…..**
**மூன்றாவதாகவும் கீறுகிறாய்…..**
**மேலும் மேலும் கீறிக்கொண்டே இருக்கிறாய்**
**வலிகளைப் போல அல்ல**
**ரத்தம் சாவகாசமாய்க் கசிகிறது"**

**(மர.ம.ம. பக்.32)**

என்ற கவிதை வரிகளில் வன்முறை கசிகிறது.

### சுதந்திரப் பிரகடனம்

இவ்வுலகில் சுதந்திரமனுசியாக வாழ்வதற்கு ஏற்ற சொற்களைக் கவிதையாக்கித் தருகிறார். கூச்சம், அவமானம், வலி என அனைத்தையும் பிரபஞ்ச வெளியாக்கிக் கடக்க நினைக்கும் போக்கினை,

**"உன் உலகம் நீராலானது**
**உன் இயக்கம் நீச்சலால் அமைகிறது**
**உன் சுதந்திரமோ வெறும்**
**கண்ணாடிக் குடுவைக்குள் அடக்கம்**
**எனக்கு இப்பிரபஞ்சம் முழுவதையும் போல"**

**(மர.ம.ம. பக்.37)**

என்ற கவிதை வரி உணர்த்துகிறது.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சைப் புகினும்**
**கற்கை நன்றே**
**நன்றோ………**
**நன்றாய் கற்றும்**
**பிச்சை புகுதல்? "**

**(மர.ம.ம. பக்.32)**

### அருவருப்பின் எதிர் அழகியல்

சக உயிரியாய் இவ்வுலக வாழ்வைக் கடக்கும் திருநங்கைகளின் மொழி, உடல், கலை, அரசியல், அனைத்தும் சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத நிலையை புறக்கணிப்பை வலிநிறைந்த வார்த்தைகளால் கவிதையாக்கித் தருகிறார் வித்யா.

**"சீண்டிப் பார்ப்பதற்கென்று வயது**
**வரம்பொன்றுமில்லை**
**களியாட்டத்திற்கென்று நிலையான**
**விலையேதுமில்லை**
**தொடையைக் கழுவி முடிக்கும் வரைக்**
**காத்திருக்க வேண்டியதில்லை**
**முன்பாகவே மேடையேறி விடு**
**சிரி வேகமாய்**
**வேக வேகமாய் சிரி**
**என் சுயம் ஆங்காரம் கொண்டு தெறிக்க சிரி**
**அதைவிட நீ செய்வதற்கு வேறு**
**காரியம் ஒன்றும் இல்லை"**

**(மர.ம.ம. பக்.50)**

என்ற கவிதை வரிகள் இந்த சமூகத்தின் மீது திருநங்கைகளுக்கு உள்ள உச்சகட்ட கோபத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

### முடிவுரை

இந்த சமூகம் திருநங்கைகள் மீது வைத்திருக்கும் பொதுப்புத்தியை, போலியான உறவுகள் தரும் நம்பிக்கைகளை, அங்கீகரிக்காத வாழ்கையின் முடிவுகளை யதார்த்தக் குரலில் வித்யாவின் கவிதைகள் கலகம் செய்கின்றன. ஆண், பெண், சமூக அர்த்தத்தைக் கடந்த நிலையில் அவமதிப்புகளைத் தாகமும், அழகுமாய் வித்யாவின் கவிதைகள் அம்பலப்படுத்துகின்றன. கவிதை நூல் தலைப்பிற்கேற்ப மரணம் மட்டும் மரணம் அல்ல மரணிக்க வைக்கும் சொற்களால்

மனச்சாவு பெறுவதும், அவமானம் அடைவதும் மரணமே. மரணத்தின் படியில் ஓலமிடும் கவிதைவரிகள் பட்டாம் பூச்சிகளாக இப்பிரபஞ்ச வெளியில் விடுதலை அடைகின்றன.

**அடிக்குறிப்பு**


1. திருக்குறள், (2015). பரிமேலழகர் உரை, குறள்.727, விசா பப்ளிகேசன்ஸ்
2. இராமநாதப்பிள்ளை, ப மற்றும் சிதம்பரனார் அ (2016). திருமந்திரம் மூலமும் உரையும் பாடல். 446.
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், (1988). இளம்பூரணர் உரை, நூற்பா.495 தஞ்சைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு- தஞ்சாவூர்.
4. தொல்காப்பியம், சொல்லதிகாரம், (1988). இளம்பூரணர் உரை, நூற்பா.487, தஞ்சைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, தஞ்சாவூர்.
5. லிவிங் ஸ்மைல் வித்யா (2017). மரணம் மட்டுமா மரணம், கருப்புப் பிரதிகள், முதற்பதிப்பு.